தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 107/மா/2026
நாள்10.08.2026

L. கார்த்திகேயன்,
வேலூர். --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
வேலூர் மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

வேலூர்–632 001, சங்கரன்பாளையம், L.I.C. காலனி, கதவு எண் 17/5C என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. கார்த்திகேயன் என்பவரின் 22.03.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.03.2026 அன்று பெறப்பட்டு 107/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

வேலூர்–632 001, சங்கரன்பாளையம், L.I.C. காலனி, கதவு எண் 17/5C என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. கார்த்திகேயன் என்பவர் 22.03.2026 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

1) எனக்கு வேலூர் மாநகராட்சி 3வது மண்டலம் ஆரணி சாலையில் பழைய சொத்து வரி 035/410912, 035/410913, 035/410914 மற்றும் 035/410916 ஆக நான்கு வரிவிதிப்புகளும் நான்கு கதவெண்களும் உள்ள வணிக கட்டிடம் உள்ளது.
2) சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986ன் பிரிவு 3, 6 மற்றும் 25படி இயற்றப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி கடந்த 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்த வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.2 நாள் 19.04.2017 மற்றும் வெளியீடு எண் 14 நாள் 24.08.2019 மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. (மேற்படி விளம்பர நகல்கள் இணைப்பு எண் 1 ஆக இணைக்கப்பட்டுள்ளது.)
3) வெளியிடப்பட்ட விளம்பர அறிக்கைப்படி திடக்கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் அட்டவணை 1–ல் 1) குடியிருப்பு, 2) நிறுவனம் மற்றும் 3) வணிகம் என்று மூன்று வகைகளாக பிரித்து திடக்கழிவு மேலாண்மைக்குரிய குப்பைவரி பயனர் கட்டணமாக வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு பக்கம் 10ல் மற்றும் 11ல் பத்தி 4 உட்பத்தி F3யை காணலாம்).
4) என் வணிகவளாக கட்டிடத்திற்கு நான்கு கதவெண்கள் இருந்தும் நான்கு வரிவிதிப்புகள் இருந்தும் ஒரே நிறுவனம் தொழில் செய்ய வாடகை விடப்பட்டுள்ளது. வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டின்படி வேலூர் மாநகராட்சியும் அதற்கான உரிமம் D & O

வழங்கப்பட்டு அதில் குப்பை வரி பயனர் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. அதன் ரசீதுகள் நகல்கள் இணைப்பு எண் 2 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

5) மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டின்படி வணிக வளாக கட்டிட உரிமையாளருக்கு குப்பை வரி பயனர் கட்டணம் விதிக்க கூடாத நிலையில் வேலூர் மாநகராட்சியானது எனது வணிக வளாக கட்டிடத்திற்கு நான்கு கதவெண்கள் மற்றும் நான்கு சொத்துவரி விதிப்புகள் உள்ளதில் பழைய வரிவிதிப்பு எண்கள் 035/410912 மற்றும் 035/410916களுக்கு கடந்த 01.07.2017 முதல் தனித்தனி வணிகம் நடப்பதாக தெரிவித்து அதாவது வரிவிதிப்பு எண் 035/410912 உள்ள கட்டிடத்தில் சிறிய உணவகம் நடத்துவதாக விளம்பரப்படி மாதம் ஒன்றுக்கு குப்பை வரி பயனர் கட்டணமாக ரூ.500/-ம், வரிவிதிப்பு எண் 035/410916 உள்ள கட்டிடத்தில் இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடை நடத்துவதாக விளம்பரப்படி மாதம் ஒன்றுக்கு குப்பை வரி பயனர் கட்டணமாக ரூ.50/– விதிக்கப்பட்டுள்ளது. வரிவிதிப்பு எண்கள் 035/410913 மற்றும் 035/410914 ஆகிய எண்களுக்கு பயனர் கட்டணம் விதிக்கப்படவில்லை. மேலும் குப்பை வரி பயனர் கட்டணம் குறித்து கடந்த 04.04.2019ல் இருந்து புகார் இருந்தும் வேண்டுமென மேற்குறிப்பிட்ட இரண்டு வரிவிதிப்புகளுக்கு கடந்த 01.04.2023 முதல் ஒரு வரி விதிப்பு கட்டிடத்தில் எலக்ட்ரிக்கல் கடை நடத்துவதாக விளம்பரப்படி மாதம் ஒன்றுக்கு குப்பை வரி பயனர் கட்டணமாக ரூ.100/– ஆக விதிக்கப்பட்டுள்ளது. நான்கு கதவெண்கள் மற்றும் நான்கு விதிப்புகளுக்கு ஏதோ கற்பனையாக வணிகம் நடைபெறுவதாக நான்கு விதமாக குப்பை வரி பயனர் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி நிறுவனத்தில் ஒரே இன தொழில் தான் நடந்து வருகிறது.

6) என் வணிக கட்டிடத்திற்கு ஒரே வணிகம் செய்ய வாடகை விட்டு இருந்து சமயத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் விளம்பரப்படுத்தப்பட்ட வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 2 நாள் 19.04.2017 மற்றும் வெளியீடு எண் 14 நாள் 24.08.2019 ஆகிய விளம்பரங்களை புறக்கணித்து ஒரே வணிகம் செய்யும் வணிக வளாக கட்டிடத்திற்கு நான்கு விதமான வணிகம் நடைபெறுவதாக கற்பனையாக முறையற்ற குப்பை வரி பயனர் கட்டணம் விதித்திருப்பது குறித்து கடந்த 04.04.2019ல் நேரில் புகார் அளிக்கப்பட்டது. நான் கொடுத்த புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமையால் 31.05.2022, 30.05.2023, 13.03.2024, 27.06.2024 ஆகிய தேதிகளில் பதிவு தபால்கள் மூலம் புகார்கள் அனுப்பப்பட்டது. அக்கடிதங்கள் முறையாக சார்வு செய்யப்பட்டுள்ளது. அதன் கடித நகல்கள் மற்றும் ஒப்புகை அட்டையும் ஒவ்வொரு கடிதத்துடன் சேர்த்து இணைக்கப்பட்டுள்ளது. மேலும் என் புகார் கடிதங்கள் மேல் அதிகாரிகள் என்ற முறையில் துணை ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கும் நகலிட்டு பதிவு தபால்கள் அனுப்பப்பட்டுள்ளது. மொத்த கடிதங்கள் மற்றும் ஒப்புகை அட்டைகளையும் இணைப்பு எண் 3 ஆக இணைக்கப்பட்டுள்ளது.

7) உரிய அலுவலரான உதவி ஆணையாளர் அவர்களுக்கு அவரின் மேலதிகாரியான துணை ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு புகார்கள் அனுப்பியும், எந்த நடவடிக்கையும் எடுக்காமையால் என் புகார் கடிதங்கள் அனைத்தும் ஒரு வழி பாதையாகத்தான் இருந்ததே ஒழிய தீர்வு காணப்படாமையால்.

8) தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி கடந்த 12.01.2025ல் பொது தகவல் அலுவலர் 3வது மண்டலம், வேலூர் மாநகராட்சி அவர்களிடம் சில தகவல்கள் கேட்கப்பட்டது. (நகல் இணைப்பு எண் 4 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

9) பொது தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர் மண்டலம் 3, வேலூர் மாநகராட்சி அவர்களின்ந.க. எண் 0148/2025/அ1/ம–3 நாள் 12.02.2025 கடித மூலம் என் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கடிதம் 13.01.2025ல் பெற்றிருந்தும், மேற்படி சட்டம் 2005–ன் காலக் கெடுவிற்குள் நடவடிக்கை எடுத்ததாக காட்டி சரியான தகவல்கள் கிடைக்கப்படவில்லை. (மேற்படி கடித நகல் இணைப்பு எண் 5 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

10) தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் பொது தகவல் அலுவலர் அளித்த பதில் சரியின்மையால் நான் கடந்த 27.02.2025ல் மேல்முறையீடு செய்தேன். (அதன் கடித நகல் இணைப்பு எண் 6 ஆக இணைக்கப்பட்டுள்ளது) மேல்முறையீட்டு அலுவலர் (ம) உதவி ஆணையர் (பொ) மண்டலம் 3, வேலூர் மாநகராட்சி அவர்கள் இது சார்பான வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 2 நாள் 19.04.2017 மற்றும் வெளியீடு எண் 14 நாள் 24.08.2019 நகல்கள் இணைத்து அனுப்பி உள்ளார். அதன் நகல்கள் இணைப்பு எண் 1 ஆக இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி மேல்முறையீட்டு அலுவலர் தன் ந.க. எண் 833/2025/அ1/63 நாள் 28.03.2025 கடித மூலம் "வேலூர் மாநகராட்சி வணிக கட்டிடத்தில் நடைபெறும் தொழிலின் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. இருமுறை குப்பை வரி நிர்ணயிக்க வழி வகை இல்லை என்று தெரிவித்துள்ளார். (கடித நகல் இணைப்பு எண் 7 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

11) தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் மேல்முறையீட்டில் கிடைத்த தகவல்கள், ஏற்கனவே வேலூர் மாநகராட்சி வெளியிடப்பட்ட விளம்பரத்தில் தெரிவித்தபடி சரியாக இருந்தமையால் நான் கடந்த 19.04.2025 உதவி ஆணையாளர் மண்டலம்–3, வேலூர் மாநகராட்சிக்கு எனக்கு 01.07.2017ல் இருந்து முறையற்ற கற்பனையாக நான்கு விதமான தொழில் நடத்துவதாக விதிக்கப்பட்ட குப்பை வரி பயனர் கட்டணத்தை மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடுகள் படியும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் மேல்முறையீட்டு அலுவலர் அளித்த தகவல் படியும் முறையற்ற கற்பனையாக நான்கு விதமான தொழில் நடத்துவதாக விதிக்கப்பட்ட குப்பைவரி பயனர் கட்டணத்தை நீக்கி நான் செலுத்த வேண்டிய சொத்துவரி நிலுவைத் தொகையை தெரிவித்தால் அத்தொகையினை செலுத்த கடமை பட்டுள்ளேன் என்று பதிவு தபால் மூலம் தெரிவித்து இனி வரும் காலங்களில் குப்பை வரி விதிக்காமல் இருக்க கேட்டிருந்தும் இன்று வரை எந்த தகவலும் இல்லை (கடித நகல் இணைப்பு எண் 8 ஆக இணைக்கப்பட்டுள்ளது.

12) எந்த புகார் அளித்தாலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி நடவடிக்கை எடுத்தும் அதன் மூலம் தீர்வு காண எத்தனித்தும் தீர்வு காணப்படாமையால் வழக்கறிஞர் மூலம் கடந்த 15.07.2025 நோட்டீஸ் அனுப்பியும் எந்த தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. (நோட்டீஸ் நகல் இணைப்பு எண் 9 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

13) கடந்த 24.07.2025ல் சென்னை முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு செய்து அந்த மனுவும் 13336357 எண்ணாக பதிவு ஆகி இருந்தும் எந்த தீர்வும் காணப்படவில்லை. (கடித நகல் இணைப்பு எண் 10 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

14) இதற்கிடையில் தமிழக அரசு உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தை கொண்டு வந்ததை பயன்படுத்தி கடந்த 12.09.2025ல் நடைபெற்ற முகாமில் மனு செய்யப்பட்டது. (நகல் இணைப்பு எண் 11 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

15) உங்களுடன் ஸ்டாலின் முகாமில் அளித்த மனுவிற்கு வேலூர் மாநகராட்சி மண்டலம் 3 உதவி ஆணையாளர் (பொ) அவர்கள் ந.க. எண் 2481/2025/எச்1/மா நாள் 27.10.2025 கொண்ட கடிதத்தில் "வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 2 நாள் 19.04.2017 மற்றும் வெளியீடு எண் 14 நாள் 24.08.2019 அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் தங்களின் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் குறைக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று தெரிவித்துள்ளார். (கடித நகல் இணைப்பு எண் 12 ஆக இணைக்கப்பட்டுள்ளது). வணிக வளாக கட்டிடத்திற்கு குப்பை வரி விதிக்க வழிவகையில்லாத நிலையில் குறைக்க மேல் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

16) என் வணிக வளாக கட்டிடத்திற்கு வேலூர் மாநகராட்சி மண்டலம்–3 உள்ள உதவி ஆணையாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005க்கு சரியான பதிலும், உங்களுடன்

ஸ்டாலின் திட்டத்திற்கு ஒரு மழுப்பலான முறையற்ற தகவல் அளித்துள்ளது விந்தையாக உள்ளது. ஒரே அலுவலக வளாகத்தில் ஒரே பதவி அதாவது உதவி ஆணையாளர் என்ற பொறுப்பில் உள்ளவரே மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005க்கு ஒரு விதமான தகவலும், உங்களுடன் ஸ்டாலினில் என்ற முகாமில் அளித்த பதிலும் ஒன்றுக்கு ஒன்று ஒத்துவராமல் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

17) இதற்கிடையில் வேலூர் மாநகராட்சி மண்டலம்–3 அலுவலகத்திலிருந்து 04.11.2025 தேதியிட்ட சொத்து வரி/சேவைக்கான கட்டணம் கேட்பு அறிவிப்பு கடந்த 24.01.2026ல் கிடைத்தது மேற்படி நோட்டீஸ் மூலம் என் கோரிக்கையை ஏற்றதாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் மேல்முறையீட்டின் கூறிய தகவல்கள் மூலம் தகவல் எடுத்ததாகவும், மற்றும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கொடுத்த மனுவிற்கு கிடைத்த தகவல்படியும் எந்த பரிசீலனையும் செய்யாமல் நோட்டீஸ் கிடைக்கப்பட்டது (நோட்டீஸ் நகல்கள் இணைப்பு எண் 13 ஆக இணைக்கப்பட்டுள்ளது). மேற்படி நோட்டீஸ்களில் 01.04.2017 முதல் 2025–2026 வரையான காலக் கட்டத்தில் அபராத கட்டணம் ரூ.1080/–ம் சொத்து வரியாக ரூ.40392/–யும் குப்பை வரி ரூ.63150/–மாக ரூ.104622/–க்கான கேட்பு அறிவிப்பு நோட்டீஸ்களில் சொத்து வரியைக் காட்டிலும் அதிகமான குப்பை வரி விதிக்கப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.

18) வணிக வளாக கட்டிடங்களுக்கு முரண்பாடு உள்ளதை உதவி ஆணையாளர் அவர்களுக்கும் மேல்அதிகாரியான துணை ஆணையாளர் மற்றும் ஆணையாளர் போன்ற அதிகாரிகளுக்கு கடந்த 04.04.2019 முதல் தெரிவித்திருந்தும் ஆணையாளர் மண்டலம்–3 வேலூர் மாநகராட்சியும் துணை ஆணையாளர் மற்றும் ஆணையாளர் ஆகிய அதிகாரிகள் மாவட்ட அரசிதழை புறக்கணித்து செயல்பட்டுள்ளார்கள். என் கோரிக்கை தவறாக இருந்திருந்தால் என் மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என் கோரிக்கை வெளியிடப்பட்ட அரசிதழை சார்ந்து உள்ளது.

என் புகார் மனுவை அவ்வப்பொழுது பரிசீலிருந்தால் அந்தந்த காலத்தில் சொத்துவரி செலுத்தியிருக்க முடியும் எனக்கு அபராதத் தொகையே வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

19) வேலூர் மாநகராட்சி அலுவலர்கள் தன்னிச்சையாக வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டை புறக்கணித்து செயல்பட்டதால் ஏற்பட்ட பிரச்சனை. அரசு அவ்வப்பொழுது வழங்கும் சட்ட திட்டங்களை செயல்படுத்தும் அலுவலர்களே விளம்பரம் செய்வதும் அதனை அதே அலுவலர்களே புறக்கணிப்பதும் வேதனையாக உள்ளது.

20) கடந்த ஆறு ஆண்டுகளாக இது குறித்து கடித தொடர்பு கொண்டால் எந்த பதிலும் கிடைப்பது இல்லை காலக்கெடு நிர்ணயித்த தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005க்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டங்களுக்கு மட்டுமே அறை வேக்காட்டுதனமாக பதில் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

21) கடந்த 04.04.2019 முதல் பலமுறை புகார்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லாமையால் நான் மிக மனஉளைச்சலில் இருந்து வருகிறேன். இதனால் ஒவ்வொரு முறையும் தட்டச்சு செய்ய செலவிடுவதும், பதிவு தபால்கள் மூலம் செலவிடுவதும் மேற்கண்ட தொகைகளை ஈடுசெய்யப்படும் என்று அவ்வப்பொழுது அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தும் ஒரு அதிகாரியும் தன் தவறினை உணர்ந்ததாக தெரியவில்லை. அதிகாரிகள் செய்த தவறுகளினால் நான் அபராதம் செலுத்த வேண்டும் என்பது எந்த வகையில் நியாயம் என்று புரியவில்லை.

22) வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடுகள் படி நடவடிக்கை எடுத்து முறையற்ற முறையில் விதிக்கப்பட்ட குப்பை வரிகளை நீக்க பலமுறை பதிவு தபால்கள் அனுப்பியும் எந்த தகவலும் கிடைக்காமையாலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி மேல்முறையீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் மூலம் நடவடிக்கை எடுத்து முறையற்ற குப்பை வரியை நீக்க கேட்டும் எந்தவித தீர்வும் கிடைக்காமையால் வழக்கறிஞர் மூலமாக நோட்டீஸ் அனுப்பியும், முதலமைச்சர் தனிப்பிரிவு சென்னை அவர்களுக்கும் புகார் செய்தும், உங்களுடன் ஸ்டாலின் முகாமில் புகார் செய்தும்

எந்தவிதமான பயனும் கிடைக்காமையால் மாநகராட்சியில் இருந்து தகவல் பெற ஒரே வழி தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005க்கு மட்டுமே என்று கருதி மீண்டும் கடந்த 03.12.2025ல் பொது தகவல் அளிக்கும் அலுவலருக்கு புகார் செய்யப்பட்டது அதற்கு கிடைத்த பதில் கடித நகல். (இணைப்பு 14 ஆக இணைக்கப்பட்டுள்ளது) சரியானதாக இல்லாமையால் மீண்டும் கடந்த 06.01.2026 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்படி மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீடு அலுவலர் அவர்களும் பொது தகவல் அளித்த பதிலையே தனியா பிரிண்ட் எடுத்து அனுப்பி உள்ளனர். கடித நகல் (இணைப்பு எண் 15 ஆக இணைக்கப்பட்டுள்ளது) பொது தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் எனது முதல் கேள்விக்கு "ஏற்கனவே பதிலில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட விவரங்கள் பதிலாக தயார் செய்து பதில் அளிக்க வேண்டுமெனில் அவை சட்டத்திற்கு பொருந்தாது என்று நான் நடந்த தவறுகளை சுட்டிக்காட்டி தீர்வு கேட்டால் எதுவோ புதிய தகவல்கள் பதிவு செய்து தகவல் தர கேட்டதாக சித்தரித்து பதில் கிடைக்கப் பெற்றேன்.

23) கடந்த 10.02.2026 அன்று எனக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை பட்டியலிட்டு ஆணையாளர், வேலூர் மாநகராட்சி, வேலூர் அவர்களுக்கு காலக்கெடு நிர்ணயித்து பிப்ரவரி `26 மாத இறுதிக்குள் தீர்வு செய்யவும் அப்படி தீர்வு கிடைக்காமல் போனால் விளம்பரத்திற்கு எதிராக செயல்பட்ட அதிகாரிகள் மீதும் எனக்கு ஏற்பட்ட தேவையற்ற செலவினங்களையும் எனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கான மான நஷ்டம் பெறவும் மேல்கொண்டு நீதி மன்றம் நாடி பெறவும் தயாராக உள்ளேன் என்பதை பதிவு தபால் மூலம் தகவல் அனுப்பியும் இன்றை தேதி வரையும் எந்த பதிலும் இல்லை என்பதை வருத்தமுடன் தெரிவித்துக் கொள்வதுடன் (கடித நகல் மற்றும் ஒப்புதல் அட்டையும் இணைப்பு எண் 16 ஆக இணைக்கப்பட்டுள்ளது).

24) எனவே என் பிரச்சனைகளை உரிய தகவல்களை ஆவண சாட்சிகளுடன் சமர்பித்துள்ளதை ஏற்று,

- என் வணிக வளாக கட்டிடத்திற்கு 01.07.2017 முதல் சொத்து வரியுடன் முறையற்ற முறையில் கற்பனையாக விதிக்கப்பட்ட நான்கு இன குப்பை வரி பயனர் கட்டணத்தை நீக்க ஆணையிட வேண்டுகிறேன்.
- அதிகாரிகளின் அலட்சியத்தால் ஏற்பட்ட அபராத் தொகை ரூ.1080/–யை நீக்கிட வேண்டுகிறேன்.
- அதிகாரிகள் அவர்கள் வெளியிட்ட விளம்பரங்களை புறக்கணித்தமைக்கு நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.
- 04.04.2019 முதல் இந்த விஷயத்தில் போராடி வருவதால் எனக்கு ஏற்பட்ட செலவினங்களான டைப்சார்ஜ், ஜிராக்ஸ் கட்டணம் எழுதுப் பொருட்கள் மற்றும் பதிவு அலுவலக செலவுகளை ஈடுகட்ட ரூ.15,000/–யை வேலூர் மாநகராட்சி மண்டலம்–3 மூலம் கிடைத்திட ஆணையிட வேண்டுகிறேன்.
- எனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூ.1,00,000/– நஷ்டஈடு கிடைத்திட வேலூர் மாநகராட்சி 3வது மண்டல அலுவலர்களிடம் ஆணையிட வேண்டுகிறேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 28.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. அதன்படி வேலூர் மாநகராட்சி உதவி ஆணையர் தனது கடிதம் ந.க. எண் 1287/எச்1/ ம–3/2026 நாள் 18.05.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"1. மனுதாரருக்கு வேலூர் மாநகராட்சி மண்டலம்–3 ஆரணி சாலையில் பழைய சொத்து வரி 035/410912, 035/410913, 035/410914 மற்றும் 035/410916 என நான்கு வரிவிதிப்புகாக செய்யப்பட்டு கடைகள் நடைபெற்று வருகின்றன.

2. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்த வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.2 நாள் 19.04.2017 மற்றும் வெளியீடு எண்.14 நாள் 24.08.2019 மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
3. வெளியிடப்பட்ட விளம்பர அறிக்கையின்படி திடக்கழிவு மேலாண்மை திடக்கழிவு கட்டணம் அட்டவணை 1–ல், 1. குடியிருப்பு, 2. நிறுவனம் மற்றும் 3. வணிகம் என்று மூன்று வகைகளாக பிரித்து திடக்கழிவு மேலாண்மைக்குரிய குப்பை வரி பயனர் கட்டணமாக வசூலிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.
4. மனுதாரரது வணிக வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் நிர்ணயிக்கும் சமயத்தில் நான்கு எண்ணிக்கையிலான நிறுவனங்கள் தனிதனியாக நடத்தப்பட்டு அவற்றிற்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி தனிதனியாக உபயோகிப்பாளர் பயன்பாட்டு கட்டணம் (SUC) விதிக்கப்பட்டது.
5. இதனை தொடர்ந்து நாளடைவில் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனத்தில் வாடகை கடைகள் நடத்தி வந்த நபர்கள் கடைகளை காலி செய்துவிட்டு சென்று விட்டனர். இது தொடர்பாக கடைகளை காலி செய்து கடைகள் மூடப்பட்டு இருப்பதாகவும், கடைகள் ஏதும் நடைபெறவில்லை என்ற விவரத்தினை மனுதாரர் மாநகராட்சிக்கு தெரிவிக்கப்படவில்லை.
6. மேலும் இது தொடர்பாக மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்படி கடந்த 15.01.2025–ல் பொது தகவல் அலுவலர் மண்டலம்–3 வேலூர் மாநகராட்சி பொது தகவல் அலுவலரிடம் சில தகவல்கள் கேட்கப்பட்டதற்கான பதில் தெரிவிக்கப்பட்டது.
7. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்படி பொது தகவல் அலுவலர் மேல் முறையீட்டு அலுவலர் ந.க. எண் 0833/2025/ம3/எச்1 நாள் 28.03.2025 கடிதம் மூலமாக சம்பந்தப்பட்ட ஒரே வரி விதிப்பிற்கு வணிக வளாகத்திற்கு இருமுறை குப்பை வரி நிர்ணயிக்க வழிவகை இல்லை என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.
8. திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி சம்பந்தப்பட்ட வணிக நிறுவனத்தின் நடத்தப்பட்ட கடைகளுக்கு நேரடியாக ஆய்வு செய்த பின்னரே திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் கட்டணம் (SUC) நிர்ணயிக்கப்பட்டது. மனுதாரர் கூறியுள்ளவாறு முறையற்ற கற்பனையாக பயனீட்டாளர் கட்டணம் (SUC) நிர்ணயிக்கப்படவில்லை.
9. சம்பந்தப்பட்ட மனுதாரர் கட்டிடத்தில் உண்மையாகவே நடத்தப்பட்டு வந்த கடைகளுக்கு மட்டுமே (SUC) பயனீட்டாளர் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.
10. நாளடைவில் இதற்கு அடுத்தபடியாக உள்ள காலங்களில் சம்பந்தப்பட்ட வணிக வளாகத்தில் நடத்தப்பட்டு வந்த கடைகள் காலி செய்யப்பட்டு தற்போது ஒரே வணிக நிறுவனமாக (கடையாக) செயல்பட்டு வரப்படுகிறது என நேரிடை ஆய்வில் தெரிய வருகிறது.
11. மேலும் தற்போது முன்பு நடத்தப்பட்டு வந்த கடைகள் காலி செய்யப்பட்டு ஒரே நிறுவனம் செயல்பட்டு வருவதால் மனுதாரரின் கோரிக்கை ஏற்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வரி விதிப்பு எண்களில் உள்ள (SUC) உபயோகிப்பாளர் கட்டணம் 10.03.2026–ஆம் தேதி வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் உத்திரவு பெறப்பட்டு 2026–2027–ஆம் ஆண்டு முதல் மனுதாரர் கோரியுள்ள நான்கு வரி விதிப்பு எண்களுக்கான (SUC) பயனிட்டாளர் கட்டணம் நீக்கம் செய்யப்பட்டது என உத்திரவு நகல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் மற்றும் அவரது தந்தை திரு.மு. லிங்கேசன் ஆகியோர் 10.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"வேலூர் மாநகராட்சி 3வது மண்டலம் ஆரணி சாலையில் உள்ள நான்கு வரிவிதிப்புகளும், நான்கு கதவெண்களும் உள்ள வணிக கட்டிடம் எனக்கு சொந்தமாக உள்ளது. அதன் சொத்துவரிவிதிப்பு எண்கள்.035/410912, 035/410913, 035/410914 மற்றும் 035/410916 ஆகும்.

வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.2 நாள் 19.04.2017, விளம்பர அறிக்கையின்படி திடக்கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் அட்டவணை 1-ல்,

(1) குடியிருப்பு.

(2) நிறுவனம் மற்றும்,

(3) வணிகம் என்று மூன்று ,

வகைகளாக பிரித்து திடக்கழிவு மேலாண்மைக்குரிய குப்பைவரி பயனர் கட்டணமாக வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வணிகவளாக கட்டித்தில் நான்கு கதவெண்கள் இருந்தும். 4 வரிவிதிப்புகள் இருந்தும் ஒரே நிறுவனம் தொழில் செய்ய வாடகைவிடப்பட்டுள்ளது. வேலூர் மாநகராட்சி அதற்கான D & O உரிமம் வழங்கப்பட்டு குப்பை வரி பயனர் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

வேலூர் மாநகராட்சி என்னுடைய வணிக வளாக கட்டிடத்தின் வரிவிதிப்பு எண்.035/410912 உள்ள கட்டிடத்தில் சிறிய உணவகம் நடத்துவதாக கூறி, மாதம் ஒன்றுக்கு குப்பை வரியாக ரூ.500/-ம், வரிவிதிப்பு எண்.035/410916 உள்ள கட்டிடத்தில் இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடை நடத்துவதாக கூறி மாதம் ஒன்றுக்கு குப்பை வரியாக ரூ.50/- 01.07.2017 முதல் கேட்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடை உரிமையாளர்களிடமிருந்தும் குப்பை வரி வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட கட்டிடத்தின் நான்கு வரிவிதிப்பு இருந்த போதிலும் ஒரே இனதொழில் தான் நடந்து வருகிறது. இது குறித்து 2019-ஆம் ஆண்டு முதல் புகார் கொடுத்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் அளித்துள்ளார்கள்.

கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் அட்டவணை-1ன்படி கட்டிட உரிமையாளரிடமிருந்து குப்பை வரி வசூலிக்க இயலாது.

மேற்கண்ட குப்பை வரி நிலுவைத் தொகையை நீக்கம் செய்யாததால் எங்களால் வேலூர் மாநகராட்சிக்கு சொத்துவரி செலுத்த இயலவில்லை.

எனவே, என் வணிக வளாக கட்டிடத்திற்கு 01.07.2017 முதல் சொத்து வரியுடன் முறையற்ற முறையில் கற்பனையாக விதிக்கப்பட்ட நான்கு இனகுப்பைவரி பயனர் கட்டணத்தை நீக்கிடவும், அதிகாரிகளால் ஏற்பட்ட அபராதத் தொகை ரூ1080/-ஐ நீக்கிடவும், வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்."

7. எதிர்மனுதாரர் தரப்பில் வேலூர் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் 10.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:-

“1) மனுதாரருக்கு வேலூர் மாநகராட்சி மண்டலம் 3 ஆரணி சாலையில் நான்கு கடைகளுக்கு பழைய சொத்து வரி 035/410912, 035/410913, 035/410914 மற்றும் 035/410916 ஆகும் .

2) திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்த வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.2 நாள் 19.04.2017 மற்றும் வெளியீடு எண்.14 நாள் 24.08.2019–ன்படி திடக்கழிவு மேலாண்மை திடக்கழிவு கட்டணம் அட்டவணை 1ல்,

(1) குடியிருப்பு
(2) நிறுவனம் மற்றும்
(3) வணிகம் என்று மூன்று வகைகளாக பிரித்து திடக்கழிவு மேலாண்மைக்குரிய குப்பை வரி பயனர் கட்டணமாக வசூலிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

3) மனுதாரரது வணிக வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் நிர்ணயிக்கும் சமயத்தில் நான்கு எண்ணிக்கையிலான நிறுவனங்கள் தனித்தனியாக நடத்தப்பட்டு அவற்றிற்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி தனித்தனியாக உபயோகிப்பாளர் பயன்பாட்டு கட்டணம் (SUC) விதிக்கப்பட்டது.

4) நாளடைவில் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனத்தில் வாடகை கடைகள் நடத்தி வந்த நபர்கள் கடைகளை காலி செய்துவிட்டு சென்று விட்டனர். இது தொடர்பாக கடைகளை காலி செய்து கடைகள் மூடப்பட்டு இருப்பதாகவும், கடைகள் ஏதும் நடைபெறவில்லை என்ற விவரத்தினை மனுதாரர் மாநகராட்சிக்கு தெரிவிக்கப்படவில்லை.

5) மனுதாரர் கடை உரிமையாளரிடமிருந்து குப்பை வரி வசூலிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில் அது குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆணை பெற்று அக்கேட்பினை ரத்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6) தற்போது வணிக வளாகத்தில் நடத்தப்பட்டு வந்த கடைகள் தற்போது ஒரே வணிக நிறுவனமாக (கடையாக) செயல்பட்டு வரப்படுகிறது என ஆய்வில் தெரிய வந்ததால், மனுதாரரின் கோரிக்கை ஏற்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வரி விதிப்பு எண்களில் உள்ள (SUC) உபயோகிப்பாளர் கட்டணம் 10.03.2026ம் தேதி, வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் உத்திரவு பெறப்பட்டு 2026–2027ம் ஆண்டு முதல் மனுதாரர் கோரியுள்ள நான்கு வரி விதிப்பு எண்களுக்கான (SUC) பயனிட்டாளர் கட்டணம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. நடப்பு 2026–2027 ஆண்டிற்கு தற்போது நடைபெற்று வரும் வணிகத்திற்கு ஏற்ப அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளவாறு (SUC) உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு கேட்பு அனுப்பப்படும் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.”

8. மனுதாரரின் மனு, மனுதாரர் மற்றும் மனுதாரரின் தந்தை ஆகியோரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை, உதவி ஆணையர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

“வேலூர் மாநகராட்சி 3வது மண்டலம் ஆரணி சாலையில் உள்ள நான்கு கதவெண்கள் கொண்ட நான்கு சொத்து வரிவிதிப்பு எண்கள்.035/410912, 035/410913, 035/410914 மற்றும் 035/410916 உள்ள வணிக வளாக கட்டிடத்தில், சொத்துவரிவிதிப்பு எண்.035/410912–ல் உள்ள கட்டிடத்தில் சிறிய உணவகம் நடத்துவதாக கூறி, மாதம் ஒன்றுக்கு குப்பை வரியாக ரூ.500/-ம் மற்றும் வரிவிதிப்பு எண்.035/410916 உள்ள கட்டிடத்தில் இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடை நடத்துவதாக கூறி மாதம் ஒன்றுக்கு

குப்பை வரியாக ரூ.50/-ம், 01.07.2017 முதல் கேட்பு நிர்ணயிக்கப்பட்டு, கடை உரிமையாளர்களிடமிருந்தும் குப்பை வரி வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடத்தின் நான்கு கதவெண்கள் மற்றும் நான்கு சொத்துவரிவிதிப்பு இருந்த போதிலும் ஒரே நிறுவனம் தொழில் செய்ய வாடகைக்குவிடப்பட்டுள்ளது என்பதும், வேலூர் மாநகராட்சி அதற்கான D & O உரிமம் வழங்கப்பட்டு குப்பை வரி பயனர் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், இது தொடர்பாக 2019–ஆம் ஆண்டு முதல் புகார் கொடுத்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.2 நாள் 19.04.2017, விளம்பர அறிக்கையின்படி திடக்கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் அட்டவணை 1ன்படி கட்டிட உரிமையாளரிடமிருந்து குப்பை வரி வசூலிக்க இயலாது என்பதும், மேற்கண்ட குப்பை வரி நிலுவைத் தொகையை நீக்கம் செய்யாததால் மனுதாரரால் வேலூர் மாநகராட்சிக்கு சொத்துவரி செலுத்த இயலவில்லை என்பதும், எனவே, மனுதாரர் தனது வணிக வளாக கட்டிடத்திற்கு 01.07.2017 முதல் சொத்து வரியுடன் விதிக்கப்பட்ட நான்கு இனகுப்பைவரி பயனர் கட்டணத்தை நீக்கிடவும், அதிகாரிகளால் ஏற்பட்ட அபராதத் தொகை ரூ1080/-ஐ நீக்கிடவும், வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு, மனுதாரர் மற்றும் அவரது தந்தை ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள, வேலூர் மாநகராட்சி மண்டலம் 3 ஆரணி சாலையில் தனது நான்கு கடைகளுக்கான சொத்து வரிவிதிப்பு எண்கள் 035/410912, 035/410913, 035/410914 மற்றும் 035/410916 என்பதும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்த வேலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.2 நாள் 19.04.2017 மற்றும் வெளியீடு எண்.14 நாள் 24.08.2019–ன்படி திடக்கழிவு மேலாண்மை திடக்கழிவு கட்டணம் அட்டவணை 1ல், 1. குடியிருப்பு, 2. நிறுவனம் மற்றும் 3. வணிகம் என்று மூன்று வகைகளாக பிரித்து திடக்கழிவு மேலாண்மைக்குரிய குப்பை வரி பயனர் கட்டணமாக வசூலிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரது வணிக வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை நிர்வாக கட்டணம் நிர்ணயித்த சமயத்தில் நான்கு எண்ணிக்கையிலான நிறுவனங்கள் தனித்தனியாக நடத்தப்பட்டு அவற்றிற்கு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி தனித்தனியாக உபயோகிப்பாளர் பயன்பாட்டு கட்டணம் (SUC) விதிக்கப்பட்டது என்பதும், நாளடைவில் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனத்தில் வாடகை கடைகள் நடத்தி வந்த நபர்கள் கடைகளை காலி செய்து விட்டதால், கடைகள் மூடப்பட்டு இருப்பதாகவும், கடைகள் ஏதும் நடைபெறவில்லை என்ற விவரத்தினை மனுதாரர் மாநகராட்சிக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதும், மனுதாரர் கடை உரிமையாளரிடமிருந்து குப்பை வரி வசூலிக்கப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில், அது குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆணை பெற்று அக்கேட்பினை ரத்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், தற்போது வணிக வளாகத்தில் நடத்தப்பட்டு வந்த கடைகள் ஒரே வணிக நிறுவனமாக (கடையாக) செயல்பட்டு வருவது ஆய்வில் தெரிய வந்ததால், மனுதாரரின் கோரிக்கை ஏற்று, 2026–2027ம் ஆண்டு முதல் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வரி விதிப்பு எண்களில் உள்ள (SUC) பயனிட்டாளர் கட்டணம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்பதும், நடப்பு 2026–2027 ஆண்டிற்கு தற்போது நடைபெற்று வரும் வணிகத்திற்கு ஏற்ப அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளவாறு உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு கேட்பு அனுப்பப்படும் என்பதும் வேலூர் மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை, உதவி ஆணையர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள, வேலூர் மாநகராட்சி மண்டலம் 3 ஆரணி சாலையில் மனுதாரரின் சொத்து வரிவிதிப்பு எண்கள் 035/410912, 035/410913, 035/410914 மற்றும் 035/410916–ற்கான வணிக நிறுவனத்தில் நான்கு கடைகள் வாடகைக்கு நடத்தி வந்த நபர்கள்

கடைகளை காலி செய்து விட்டதால், கடைகள் மூடப்பட்டு, அக்கடைகளில் ஏதும் நடைபெறவில்லை என்ற விவரத்தினை மனுதாரர் மாநகராட்சிக்கு தெரிவிக்கவில்லை என்றும், மனுதாரர் கடை உரிமையாளரிடமிருந்து குப்பை வரி வசூலிக்கப்பட்டது குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆணை பெற்று அக்கேட்பினை ரத்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மற்றும் தற்போது மேற்கண்ட வணிக வளாகத்தில் நடத்தப்பட்டு வந்த கடைகள் ஒரே வணிக நிறுவனமாக (கடையாக) செயல்பட்டு வருவது ஆய்வில் தெரிய வந்ததால், மனுதாரரின் கோரிக்கை ஏற்று, 2026–2027ம் ஆண்டு முதல் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வரி விதிப்பு எண்களில் உள்ள (SUC) பயனிட்டாளர் கட்டணம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்பதும், நடப்பு 2026–2027 ஆண்டிற்கு தற்போது நடைபெற்று வரும் வணிகத்திற்கு ஏற்ப அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளவாறு உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு கேட்பு அனுப்பப்படும் என்றும் வேலூர் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. L. கார்த்திகேயன்
கதவு எண் 17/5C,
L.I.C. காலனி, சங்கரன்பாளையம்,
வேலூர்–632 001.

(2) ஆணையாளர், வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல் :</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/8/26
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032